




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து, மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (26.08.2016) நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. கெட்சி லீமா அமலினி, துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு. எம். மதுசூதனன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 574/2016 நாள்: 26.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து, மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று (26.08.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கூட்டத்திற்கு தலைமைத்தாங்கி தெரிவித்ததாவது:-

இந்தியாவின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரி மாவட்டம் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை காலங்களை அனுபவித்து வருகிறது. இந்த மாவட்டத்தின் பருவநிலை மற்றும் நில அமைப்பு இதை ஒட்டியுள்ள கேரள மாநிலத்தை போலவே அமைந்துள்ளது. மக்கள் தொகை அடர்த்தியான இந்த மாவட்டத்தில் நகர்மயமாக்கப்பட்ட கிராமங்களே அதிகமாக காணப்படுகின்றன. மக்களின் கலாசாரம் மற்றும் பழக்கவழக்கங்களும் கேரள மாநிலத்தைப் போன்றே அமைந்துள்ளது.

இந்த சூழ்நிலைகள் கொசுக்களினால் பரவும் நோய்களுக்கு சாதகமாக உள்ளது. கொசுக்களினால் பரவும் மலேரியா, சிக்கன்குனியா, மற்றும் டெங்கு காய்ச்சல் குமரி மாவட்டத்தில் காணப்படுகிறது. டெங்கு காய்ச்சல், டெங்கு வைரஸ் என்ற நுண் கிருமியால் ஏற்படுகின்றது. இந்த நோய் ஏடிஸ் என்ற கொசுக்களின் மூலம் பரவுகிறது. ஏடிஸ் கொசுக்கள் வீட்டினுள் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சுத்தமான நீர்த்தேக்கங்கள் மற்றும் மழை நீர்த்தேக்கங்களில் உற்பத்தியாகிறது. இக்கொசுக்களின் முட்டைகள் நீண்டகாலம் அழிவதில்லை. ஏடிஸ் கொசுக்கள் பகல் நேரத்தில் மனிதனை கடிக்கிறது. இவைகள் வீட்டினுள்ளே இருண்ட மற்றும் குளுமையான இடத்திலும் வெளிப்புறங்களில் நிழலான பகுதிகளிலும் காணப்படும். இந்த கொசுக்கள் நீர்த்தேக்கி வைத்திருக்கும் சிமெண்ட் மற்றும் பிளாஸ்டிக் தொட்டிகள், பயன்படுத்தாத ஆட்டு உரல்கள், டயர்கள், குளிர்சாதன பெட்டியின் பின்பகுதியில் உள்ள நீர்த்தேங்கும் டிரே ஆகியவற்றில் உற்பத்தியாகிறது.

ஏடிஸ் கொசுக்களில் உள்ள டெங்கு வைரஸ் முட்டைகள் வழியாக அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுகிறது. இப்படிப்பட்ட தன்மைகள் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளுக்கு பெரும் சவாலாக அமைகிறது.

குமரி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக 148 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து காய்ச்சல் உள்நோயாளிகளின் விபரங்கள் மாவட்ட அளவில் கணனி மயமாக்கப்பட்ட ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம் மூலம் பெறப்படுகிறது. இந்த விபரங்கள் கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு தடுப்பு நடவடிக்கைக்காக மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. சம்பந்தப்பட்ட கிராமங்களில் தடுப்பு நடவடிக்கைகளான காய்ச்சல் கண்காணிப்பு பணி,

கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் தேவைக்கேற்ப புகை மருந்து அடிக்கும் பணி ஆகியவை சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சி துறையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிக்கென கூடுதலாக தற்காலிக பணியாளர்கள் 524 பேர் உள்ளாட்சிதுறை மூலமும் 90 பேர் பொதுசுகாதாரத்துறை மூலமும் மொத்தம் 624 நபர்கள் நியமிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த தடுப்பு நடவடிக்கைகள் வட்டார அளவில் அமைக்கப்பட்ட மூன்று குழுக்கள் மற்றும் மாவட்ட அளவிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மண்டல அளவில் கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகள் மண்டல பூச்சியியல் குழு மூலம் மதிப்பீடு செய்யப்படுகிறது. டெங்கு காய்ச்சல் சந்தேகிக்கப்பட்ட நபர்களுக்கு இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, மாவட்ட பொது சுகாதார ஆய்வகம் மற்றும் மண்டல பூச்சியியல் குழுமம் திருநெல்வேலியில் பரிசோதனை செய்யப்படுகிறது.

பொதுமக்கள் தங்கள் வீட்டைச் சுற்றிலும் உள்ள உபயோகமற்ற பொருட்கள் மற்றும் திடக்கழிவுகளை அகற்றி மழைநீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்வதோடு ரப்பர் தோட்டங்களில் உள்ள சிரட்டைகளை தேவையில்லாதபோது கவிழ்த்துவைத்து கொசுப்புழு உற்பத்தியை தடுக்கவேண்டும்.

காய்ச்சல் கண்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதாரநிலையம் மற்றும் அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிட்சை மேற்கொள்ளவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

இன்று 26.08.2016 மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், டெங்கு காய்சசல் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் சார்ந்த மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது. இதில் வருவாய்த்துறை, பள்ளிகல்வித்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் மருத்துவத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். இதில் துறை வாரியாக மழை காலங்களில் ஏற்படும் மலேரியா, டெங்கு காய்ச்சல், சிக்குன்குனியா மற்றும் நீரினால் பரவும் நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. கெட்சி லீமா அமலினி, துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு. எம். மதுசூதனன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.